RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 327 | நவம்பர்.27 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார் செங்கோட்டையன்!

சென்னை: நவ.27-

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட மூத்த நிர்வாகியும், முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன், சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வதாக சபாநாயகர் அப்பாவுவிடம் கடிதத்தை வழங்கினார்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கும் அதிமுகவை ஒன்றிணைப்பது தொடர்பாக கருத்து வேறுபாடு இருந்து வந்தது.

அதிமுக ஒன்றிணைய வேண்டும் என்று செங்கோட்டையன் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இதனைத் தொடர்ந்து கே.ஏ.செங்கோட்டையன், கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டார். பின்னர், தமிழக வெற்றிக் கழகத்தில் செங்கோட்டையன் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியானது.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வதாக சபாநாயகர் அப்பாவுவிடம் கடிதத்தை இன்று வழங்கினார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், “ஐம்பது ஆண்டுகால உழைப்பிற்கு அதிமுகவின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கி பரிசு கொடுத்துள்ளனர்” என வருத்தம் தெரிவித்திருந்தார்.

## மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்தக் கோரி வழக்கு: மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை: நவ.27-

மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்தக் கோரிய வழக்கில் மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை ஒத்தக்கடையைச் சேர்ந்த ஆர்.வி.கதிர், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த பொதுநல மனு: 'கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியது. இந்த திட்ட அறிக்கையை மத்திய அரசு திரும்பி அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு விடுத்த அறிக்கையில், ‘மெட்ரோ ரயில் கொள்கையின்படி 20 லட்சம் மற்றும் அதற்கு மேல் மக்கள் தொகை உள்ள நகரங்களில் பெருமளவு பொது போக்குவரத்து திட்டங்களை தொடங்கலாம். ஆனால் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மதுரை நகரத்தின் மக்கள் தொகை சுமார் 15 லட்சம் மட்டுமே. மெட்ரோ திட்டங்கள் அதிக செலவு வாய்ந்தவை. அதோடு நீண்ட காலம் நிலைத்த தன்மையோடு இருக்க வேண்டும் என்பதால் கவனமாக திட்டமிடப்பட வேண்டும்.

ஆகவே குறைந்த மக்கள் தொகை உடைய நகரங்களுக்கு குறைந்த செலவில் செயல்படுத்தப்படும் பிற நகர போக்குவரத்து திட்டங்கள் பொருத்தமானவை. இதன் காரணமாக கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் திருப்பி அனுப்பப்படுகின்றன’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு சுமார் 14 ஆண்டு முந்தைய கணக்கெடுப்பு. மதுரை மாவட்டத்தில் தற்போது 27 லட்சத்து 29 ஆயிரத்து 671 வாக்காளர்கள் உள்ளனர். அவ்வாறெனில் 18 வயதிற்கு உட்பட்டவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், சுற்றுலா பயணிகள், பதிவு செய்யப்படாத குடியிருப்பு வாசிகள் ஆகியோரையும் சேர்த்தால் மதுரையின் மக்கள் தொகை 20 லட்சத்துக்கும் அதிகமாகவே இருக்கும்.

எனவே மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை முறையாக சரி செய்து மீண்டும் மத்திய அரசுக்கு அனுப்ப தமிழக அரசுக்கும், தமிழக அரசின் திட்ட அறிக்கை பரிசீலித்து மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசுக்கும் உத்தரவிட வேண்டும்’ இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் ஆர். அழகுமணி வாதிடுகையில், மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை மத்திய அரசு நிராகரித்துள்ளது என்றார்.

அப்போது நீதிபதிகள், மதுரை மெட்ரோ ரயில் திட்டம் நிராகரிக்கப்படவில்லை. சில விளக்கங்கள் கேட்டு திட்ட அறிக்கை திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் போது மனுதாரர் கேட்ட நிவாரணத்தை எப்படி வழங்குவது? எனக் கேள்வி எழுப்பினர். பின்னர் மனு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை டிச.16 க்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

## ரூ.2,500 கோடி போதைப் பொருள் கடத்தல் வழக்கில் இந்தியர் கைது

புதுடெல்லி: நவ.27-

டெல்லியிலுள்ள குச்சா மகாஜனி மார்க்கெட்டில் ஹவாலா ஏஜென்டாக இருந்தவர் பவன் குமார். இவர் டெல்லி, துபாய் இடையே பயணம் செய்து தனது வியாபாரத்தைப் பெருக்கி வந்தார்.

போதைப்பொருளை கடத்தும் பணியில் ஈடுபட்டு வந்த இவர், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் துபாயிலிருந்து இந்தியாவுக்கு ரூ.2,500 கோடி மதிப்புள்ள 82 கிலோ கோகைன் போதைப்பொருளை கடத்தியுள்ளார். அதை டெல்லியிலுள்ள போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

மேலும், கடந்த வாரம் ரூ.282 கோடி மதிப்புள்ள போதைப் பொருளை பவன் குமார் ஆட்கள் கடத்த முயன்றபோது அதையும் டெல்லி அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். துபாயில் இருந்தபடியே அவர் தனது போதைப்பொருள் கடத்தல் தொழிலை செய்து வந்தார்.

இதனிடையே, பவன் குமாருக்கு எதிராக டெல்லியிலுள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டு அமைப்பு (என்சிபி), சர்வதேச சில்வர் நோட்டீஸை பிறப்பித்தது. இதன்மூலம் உலகம் முழுவதும் பவன் குமாருக்கு சொந்தமான சொத்துகள், வர்த்தக தொடர்புகள் உள்ளிட்ட விவரங்களை கண்டறிய முடியும்.

பவன்குமார் தொடர்பான வழக்குகளை அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது. இந்நிலையில் அவர் துபாயில் கைது செய்யப்பட்டுள்ளார். விரைவில் அவர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவார் என்று அமலாக்கத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## விவசாயிகளுக்கு துரோகம் செய்தவர் இபிஎஸ் : முதல்வர் ஸ்டாலின் காட்டம்

சென்னை, நவ.27-

விவசாயிகளுக்காக பிரதமர் நரேந்திர மோடியை எடப்பாடி பழனிசாமி சந்திக்காதது ஏன்? என முதல்வர் மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

பின்னர், மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களைப் பட்டியலிட்டு முதல்வர் பேசினார். பின்னர் விவசாயிகளுக்கு துரோகம் இழைப்பதாக எடப்பாடி பழனிசாமியையும், தமிழர்களை வஞ்சிப்பதாக ஆளுநர் ஆர்.என். ரவியையும் விமர்சித்துப் பேசினார்.

தமிழ்நாட்டில் இருந்து வரியை மட்டும் வாங்கிக்கொண்டு, நலத் திட்டங்களை



செயல்படுத்த போதிய நிதி ஒதுக்குவதில்லை என்று மத்திய அரசையும் விமர்சித்துப் பேசினார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது,

தில்லியில் பல கார்கள் மாறி, யார் யாரையோ எடப்பாடி பழனிசாமி சந்தித்தார். பிரதமரை சந்தித்து நெல் ஈரப்பதம் தொடர்பாக கோரிக்கை விடுத்தாரா? விவசாயிகளுக்காக பேச செல்கிறார் என்றால், நானே கார் ஏற்பாடு செய்து தருகிறேன்.

பச்சைத் துண்டை அணிந்துகொண்டு விவசாயிகளுக்கு பச்சை துரோகம் செய்வதாக விமர்சித்தபோது அவருக்கு கோபம் வந்தது. இப்போதும் சொல்கிறேன், எடப்பாடி பழனிசாமி விவசாயிகளுக்கு செய்தது துரோகம் மட்டுமே. மேற்கு மண்டலத்தைச் சேர்ந்தவர் எனக் கூறிக்கொள்ளும் பழனிசாமி, ஈரோட்டிற்கு என்ன செய்தார்?

தமிழகத்தின் வளர்ச்சியை நிரந்தரமாகக் கெடுக்க வேண்டும் என ஒருவர் நினைக்கிறார், அவர்தான் ஆளுநர் ஆர்.என். ரவி. தமிழர்கள் தேச விரோதிகள் என ஆளுநர் நினைக்கிறார். அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டை பயங்கரவாதிகள் உலவும் இடமாக சித்தரிக்க முயற்சிக்கிறார். ஆளுநர் இருக்கும் அரசியல் சாசன பொறுப்புகளுக்கு துளியும் பொருத்தமற்ற தகுதியற்ற செயல் இது.

கும்பகோணத்தில் பல்கலைக் கழகம் தொடங்கும் மசோதாவுக்கு அனுமதி தராமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார். தமிழ் மொழியைப் பற்றி தமிழ்நாட்டுக்கு பாடம் எடுக்க வேண்டாம். அதில் தேர்ச்சி பெற்றவர்கள் நாங்கள்.

மத்திய ஆட்சியில் பஹல்காம் தாக்குதல், தில்லி குண்டு வெடிப்பு போன்ற அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருக்கிறது. வளர்ச்சிப் பாதையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது.

ஆனால், தமிழ்நாடு எதைக்கேட்டாலும் தரக்கூடாது என பாஜக முடிவுடன் இருக்கிறது. வரி வசூலிக்க மட்டும் தமிழ்நாடு. ஆனால் ரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது கிடையாது. வடமாநிலங்களில் 20 லட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு மெட்ரோ திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வளர்ச்சியை தடுப்பதற்காகவே ஆளுநரை நியமித்திருக்கிறது மத்திய அரசு என முதல்வர் பேசினார்.

## ‘அரசியலமைப்பு கடமைகளை நிறைவேற்றுவீர்’ குடிமக்களுக்கு பிரதமர் மோடி கடிதம்

புதுடெல்லி: நவ.27-

“அரசியலமைப்பின் சக்திதான், என்னைப் போன்ற ஒரு எளிய மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பத்திலிருந்து வந்த ஒருவர், 24 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் தொடர்ந்து பணியாற்ற உதவியது” என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு தினத்தையொட்டி, அவர் வெளியிட்ட குடிமக்களுக்கு எழுதிய கடிதத்தில், “நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களும் அரசியலமைப்பு கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அரசியலமைப்பு கடமைகள் வலுவான ஜனநாயகத்திற்கான அடித்தளம். வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதன் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்த முடியும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் அரசியலமைப்பு தினத்தை கொண்டாட வேண்டும்.

இந்த தினத்தில்



அரசியலமைப்பை உருவாக்கியவர்களுக்கு நாம் மரியாதை செலுத்துகிறோம். அவர்களின் தொலைநோக்கு பார்வை விக்சித் பாரத் (சுயசார்பு இந்தியா) என்ற இலக்கை நோக்கி நாம் முன்னோக்கி செல்ல ஊக்குவிக்கின்றன.

அரசியலமைப்பின் சக்திதான், என்னைப் போன்ற ஒரு எளிய மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பத்திலிருந்து வந்த ஒருவர், 24 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் தொடர்ந்து பணியாற்ற உதவியது. 2014 ஆம் ஆண்டு, நான் முதன்முறையாக நாடாளுமன்றத்திற்கு வந்து, ஜனநாயகத்தின் மிகப்பெரிய கோயிலின் படிகளைத் தொட்டு வணங்கிய தருணங்களை நான் இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன்.

இந்த அரசியலமைப்பு என்னைப் போன்ற பலருக்கு கனவு காணும் சக்தியையும், அந்தக் கனவுகளை நனவாக்கும் வலிமையையும் அளித்துள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

மேலும் தனது எக்ஸ் தளத்தில், “கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றுக்கு நமது அரசியலமைப்பு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இது நமக்கு உரிமைகளை வழங்கும் போதே, குடிமக்களாகிய நமது கடமைகளையும் நினைவூட்டுகிறது. இந்தக் கடமைகளை நிறைவேற்ற நாம் எப்போதும் முயற்சிக்க வேண்டும். இது வலுவான ஜனநாயகத்தின் அடித்தளமாகும். நமது செயல்கள் மூலம் அரசியலமைப்பு மதிப்புகளை வலுப்படுத்த உறுதியேற்போம்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## உதயநிதி பிறந்தநாள் விழா... பிறக்கும் குழந்தைகள் அனைவருக்கும் தங்க மோதிரம் அமைச்சர் பெரிய கருப்பன் தகவல்..

### நாகனி செந்தில்குமார், கேஆர். பெரியகருப்பன், தென்னவன் பங்கேற்பு

சிவகங்கை நவ.27

சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட திமுக மாவட்ட, மாநகர், ஒன்றிய , நகர, பேரூர்க்கழக இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டமானது மாவட்ட அமைப்பாளர் மாவட்ட மேனாள் கவுன்சிலர் நாகனி பா. செந்தில்குமார் தலைமையிலும் , மாவட்ட துணை அமைப்பாளர்களான வழக்கறிஞர் சேதுபதி ராஜா, மணலூர் கே. எம். பொற்கோ , கோவிலூர் பரணிகிட்டு என்ற வெள்ளைச்சாமி , காஞ்சிரங்கால் எஸ். எம். மதிவாணன், அரசனேரி கிங் கார்த்திக் , இளையான்குடி முகமது மஹாதீர் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது...

இதில் மாவட்டக்கழக செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் , மேனாள் அமைச்சர் முகவை மு. தென்னவன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்... அப்போது பேசிய அமைச்சர் பெரியகருப்பன் இளைசரணி நிர்வாகிகள் அனைவருக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாள் விழாவினை மாவட்டம் முழுவதும் மிகச் சிறப்பாக கொண்டாடிட வேண்டும் எனவும், அதற்காக மருத்துவ முகாம் ,இரத்த தானம், அன்னதானம் , விளையாட்டு மற்றும் கோலப்போட்டி, பள்ளி மற்றும் முதியோர் இல்லங்களில் உணவு வழங்குதல் , பத்திரிகை விளம்பரங்கள் என கோலாகலமாக கொண்டாடிட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்...

மேலும் அவர் பேசும்போது மாண்புமிகு சின்னவரின் பிறந்தநாளில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அத்துனை குழந்தைகளுக்கும் மாவட்டக் கழகத்தின் சார்பில் தங்க மோதிரங்கள் அணிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்...

இந்த கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர், மானாமதுரை நகர்மன்றத் தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி, மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ். ஏ. வல்லபாய், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்...

இந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட மாணவரணி கதிர். ராஜ்குமார் , மாவட்ட துணை அமைப்பாளர் கனி முகமது, மாவட்ட அயலக அணி சீமான் சுப்பையா, ஒன்றிய அமைப்பாளர்களான வண்டவாசி தங்கச் செல்வம் , ஆறாவயல் இராமநாதன் , மானாமதுரை நகர் கவுன்சிலர் மாரிக்கண்ணன், அதியமான் பொன்னு ச்சாமி, செம்புக்குட்டி , கோபிக்கண்ணன் , மேற்கு அழகுசுந்தர் , வடக்கு வேங்கை பாண்டி , சீனிக்குட்டி , பரத்குமார் , காளையார்கோவில் கிழக்கு முத்துப்பாண்டி , திரவியம் ,அழகுசுந்தரம், அருண்குமார் , சுகுமார், கல்லல் கிழக்கு கட்டத்தேவன் கார்த்திக், மாநகர் தினகரன், சிவகங்கை நகர் சேகர் பரத், பொறியாளர் பரத், அருண்பாண்டியன் உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள் என ஏர்ளமானோர் கலந்து கொண்டனர்...

இறுதியாக மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர் சேதுபதி ராஜா நன்றி கூறினார்..

## தொழிற் சங்கத்தின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவராக

# தேசிய முன்னனி மற்றும் இந்திய தொழிலாளர் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவராக தாம்பரம் ஜெ.கதிரவன், அவர்கள் முறைப்படி பொறுப் பேற்றுக்கொண்டார்



தாம்பரம், நவ.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பகுதியைச் சேர்ந்த ஜெ.கதிரவன் அவர்கள், கடந்த பல ஆண்டுகளாக ஏழை எளிய மற்றும் நலிவுற்ற தொழிலாளர்களுக்கு ஏராளமான உதவிகளை வழங்கியுள்ளார். எண்ணற்ற மாணவ மாணவிகளுக்கு கல்விக்கான நிதியுதவி அளித்து பயனடையச் செய்துள்ளார். நல் துறைசார்ந்த அனுபவமும், சமூகப் பணிகளில் ஈடுபாடும் கொண்டவர். தொழிலாளர் நலன் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக இவர் ஆற்றிய பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த முக்கியப் பொறுப்பு இவருக்கு வழங்கப்பட்டுள்ளது தேசியத் தலைவர் தீபக் ஜெய்ஸ்வால் அவர்களது நல்லாசியுடன் தமிழ்நாடு மாநில தலைவர் காகனம் மு.சீனிவாசன், பொதுச் செயலாளர் பாலமுருகன், மாநில ஒருங்கிணைப்பாளர் அன்பழகன் ஆகியோரது ஒப்புதலின்படி தேசியத் தலைவருக்கு பரிந்துரை செய்து இந்த பதவி நியமனத்திற்கான ஆணை வழங்கப்பட்டது.

புதிய பாதையில் புதிய பொறுப்பேற்றபின் தாம்பரம் ஜெ.கதிரவன் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியபோது ழிதிமி ஜிஹி சங்கத்தின் தமிழ்நாடு மாநில துணைத்தலைவராகப் பொறுப்பேற்றது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வாய்ப்பை வழங்கிய தேசிய மற்றும் மாநில நிர்வாகிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் உள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்களின் உரிமை களையும், நலன்களையும் பாதுகாப்பதே எனது முதன்மையான இலக்கு. குறிப்பாக, அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் நடுத்தர வணிகர்களின் கோரிக்கைகளை மத்திய, மாநில அரசுகளுக்கு எடுத்துச் சென்று தீர்வு காண்பதில் தீவிரமாகச் செயல்படுவேன்,'' என்று உறுதியளித்தார் மாநிலம் முழுவதும் உள்ள தொழிலாளர் நலன் சார்ந்த பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு உரிய தீர்வுகளைப் பெற அனைத்து சங்க உறுப்பினர் களுடன் இணைந்து செயல்படப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.





# கீழக்கோட்டையில் வானவில் மன்ற அறிவியல் கணித எளிய பரிசோதனைகள் வெண்மை புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியனுக்கு பாராட்டு




காளையார் கோவில், நவ.27-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் வானவில் மன்ற அறிவியல் கணித செயல்பாடுகள் நடைபெற்றது. அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். ஆசிரியை வாசுகி முன்னிலை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்றார். அறிவியல் மற்றும் கணித செயல்பாடுகளை வானவில் மன்ற ஸ்டெம் கருத்தாளர் ஜெயபிரியா செய்து காண்பித்து மாணவ மாணவிகளையும் செய்து பார்க்க ஊக்குவித்தார். கணிதத்தில் பித்தகோரஸ் தேற்றம் கிளினோ மீட்டர் வேதியியல் இராசாயன பச்சோந்தி (ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க வினைகள்) நரம்பு செல்லின் அமைப்பு வெப்ப விரிவாக்கம் போன்ற செயல்பாடுகள் செய்வதில் மாணவ மாணவிகள் பயிற்சி பெற்றனர். மாணவ மாணவிகள் ஆர்வமுடன் வகுப்பறையில் செய்த செயல்பாடுகளை தானே செய்து பார்த்து மகிழ்ந்தனர். இந்திய வெண்மை புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியன் பிறந்தநாள் தினத்தில் அவருக்கு புகழாரம் சூட்டப்பட்டது. ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு உதவியாளர் அஞ்சலை கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், தெத்தூர் கிராமத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை தொலைபேசி செயலி மூலம் பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.



■ மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், தெத்தூர் கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பில் மண்ணுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இயற்கை இடுபொருள் தயாரிப்பு மையம் மற்றும் பண்ணையை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.



# மானாமதுரை நகராட்சியில் தேர்வு பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன கவுன்சிலர் பதவிப்பிரமாணம் நடைபெற்றது

மானாமதுரை, நவ.27-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி நகர மன்ற அலுவலகத்தில் மாற்றுத்திறனையான புஷ்பராஜுக்கு நியமன உறுப்பினராக தேர்வு செய்து பதவி பிரமாணம் நேற்று செய்து வைத்தனர்.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன கவுன்சிலர் பதவி அளிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள், தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உள்ளாட்சியில் பதவிகளை பெறும் வகையில், சட்டசபையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டதுஅதன்படி, தற்போது அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும், தலா ஒரு தகுதியான மாற்றுத்திறனாளி நபருக்கு, நியமன கவுன்சிலர் பதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சியில் நியமன உறுப்பினராக மாற்றுத்திறனாளியான புஷ்பராஜ் தேர்வு செய்யப்பட்டார் அவருக்கு நகராட்சி ஆணையர் கோபாலகிருஷ்ணன் நகராட்சி நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி ஆகியோர் பதவி பிரமாணம் செய்து வைத்தனர் நிகழ்ச்சியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி ரவிக்குமார் நகராட்சி கவுன்சிலர்கள் மாற்றுத்திறனாளி சங்கத்தினர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்




■ 76ஆவது இந்திய அரசியலமைப்பு தினத்தினை முன்னிட்டு கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார்தலைமையில் அரசியலமைப்பு உறுதிமொழியினை அனைத்துத் துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.



# தாம்பரம் முத்துரங்க பூங்காவில் புதிய டென்னிஸ் மைதானத்தை பணிகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்ட மண்டல குழு தலைவர் டி.காமராஜ்

தாம்பரம், நவ.27-

தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம், 49வது வார்டில் உள்ள முத்துரங்க பூங்காவில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, எம்.எல்.ஏ, அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய டென்னிஸ் மைதான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணிகள் எவ்வாறு முன்னேறுகின்றன என்பதைக் கண்காணிக்கும் வகையில், 4வது மண்டல குழுத் தலைவர் மற்றும் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது தாம்பரம் மாநகர விளையாட்டு அணியின் அமைப்பாளர் எஸ்.ஜி கருணாகரன் பாண்டியன், மாநகராட்சி அதிகாரிகள், திமுக மாநகர மற்றும் பகுதி நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர். முத்துரங்க பூங்காவில் உருவாக்கப்படும் இந்த டென்னிஸ் மைதானம், உள்ளூர் இளைஞர்களின் விளையாட்டு திறன்களை மேம்படுத்தும் வகையில் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த மேம்பாட்டு திட்டம் முடிவடைந்தவுடன், தாம்பரம் பகுதியில் விளையாட்டு வசதிகள் மேலும் வலுவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் பழங்குடி இளைஞர் பரிமாற்றம் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது



தாம்பரம், நவ.27-

காஞ்சிபுரம் மாவட்டம் மேற்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில், உள்துறை அமைச்சகமும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறையும் இணைந்து நடத்தும் 'மை பாரதத் கேந்த்ரா' திட்டத்தின் கீழ், பழங்குடி இளைஞர் பரிமாற்றம் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஒடிசா, ஜார்கண்ட், சத்தீஸ்கர், மத்திய பிரதேஷ் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய ஐந்து மாநிலங்களில் இருந்து 200க்கும் மேற்பட்ட பழங்குடியினர் கலந்து கொண்டனர். பாரம்பரிய உடை அணிந்து அவர்கள் நாட்டுப்புற ஆடல், பாடல் மற்றும் கலாச்சார கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, இளைஞர்கள் கல்லூரியின் நூலகம், ஆய்வகங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை ஆசிரியர்களுடன் பார்வையிட்டனர். மேலும், அவர்களை வரவேற்க கல்லூரி மாணவர்களும் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்கள் முனைவர் ராஜா, முனைவர் பழனிகுமார், மேலாண்மை இயக்குநர் மாறன் மற்றும் மாவட்ட இளையோர் அலுவலர் கீர்த்தனா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட இளையோர் அலுவலர் கீர்த்தனா, "பழங்குடியினர் வளர்ச்சி இல்லாமல் இந்தியாவின் வளர்ச்சி முழுமையடையாது என பிரதமர் கூறியுள்ளார். இந்த பரிமாற்ற நிகழ்ச்சி தமிழகத்தில் 25 இடங்களில் நடத்தப்படுகிறது. சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியின் துவக்க விழா ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது,'' என்றார்.

மேலும், இந்த இளைஞர்கள் சென்னை நகரின் பிர்லா கோளரங்கம், மெரினா பீச் ஆகிய இடங்களைப் பார்வையிட்டு அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டதாகவும், இடதுசாரி தீவரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து வந்த இவர்களுக்கு வளர்ச்சியடைந்த சென்னை ஒரு புதிய பார்வையை அளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீ சாய்ராம் கல்லூரியின் ஆதரவுடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, மாநிலங்களுக்கு இடையேயான கலாச்சார பரிமாற்றத்தையும், பழங்குடியினரின் முன்னேற்றத்தையும் வலுப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# "இந்திய அரசமைப்பு உறுதிமொழி" மாநகராட்சி துணை மேயர் தலைமையில் ஏற்பு

மதுரை, நவ.27-

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் இந்திய அரசமைப்பு உறுதிமொழி மாநகராட்சி துணை மேயர் அவர்கள் தலைமையில் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்திய அரசமைப்பு உறுதிமொழி

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும், சமநலச் சமுதாயமும், சமயச் சார்பின்மையும், மக்களாட்சி முறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும், அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் நீதி எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை, சமுதாயப்படி நிலை, வாய்ப்பு நலம் இவற்றில் சமன்மை ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும், தனிமனிதனின் மாண்பு, நாட்டு மக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் உடன் பிறப்புரிமையினை வளர்க்கவும், உள்ளார்ந்த உறுதியுடையராய், நம்முடைய அரசமைப்புப் பேரவையில் 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம் என மாண்புமிகு மேயர் அவர்கள் வாசிக்க அனைவரும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். இதே போல் அந்தந்த மண்டல அலுவலங்களில் மண்டல உதவி ஆணையாளா;கள் முன்னிலையில் அனைத்து பணியாளர்களும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆணையாளர் (கணக்கு) திரு.வெங்கட்ரமணன், உதவி ஆணையாளர் (பணி) திருமதி.அருணாச்சலம், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# ஈஷாவால் பயிற்சி அளிக்கப்பட்ட கிராமப்புற மாணவர்கள் மாவட்ட அளவிலான செஸ் போட்டியில் வென்று அசத்தல்

கோவை, நவ.27-
பொள்ளாச்சியில் கோவை மாவட்ட அளவில் நடைபெற்ற செஸ் போட்டியில் ஈஷா அறக்கட்டளையால் பயிற்சி அளிக்கப்பட்ட கிராமப்புற பகுதிகளைச் சேர்ந்த 9 மாணவர்கள் பல்வேறு வயது பிரிவுகளில் பரிசுகளை வென்று அசத்தி உள்ளனர்.

அவனே செஸ் அசோசியேஷன் சார்பில் பொள்ளாச்சி உடுமலை பிரதான சாலையில் உள்ள ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரியில் கோவை மாவட்ட அளவிலான செஸ் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் மாணவர், மாணவிகள் என இருபாலருக்கும் பல்வேறு வயது பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் ஈஷா மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்ட 27 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் 9 மாணவர்கள் பரிசு வென்று அசத்தினர்.

இதில், 7 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் மத்வராயபுரத்தைச் சேர்ந்த எழில்மதி மற்றும் சம்யுக்தா ஆகியோர் வெற்றி பெற்றனர். அதேபோல், 15 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் ஜெயசூர்யா, பிரனிஷ் ஆகியோரும், பழங்குடியின கிராமத்தைச் சேர்ந்த சத்யா மற்றும் பூளுவப்பட்டி பகுதியைச் சேர்ந்த நந்தனா, நந்தித்தா, பிரனிதா உள்ளிட்டோரும் வெற்றி பெற்றுப் பரிசுகளைத் தட்டிச் சென்றனர்.

ஈஷாவில் துறவியாக இருக்கும் சுவாமி தத்யா, ஈஷா யோக மையத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளில் வசிக்கும் மாணவர்களுக்கு செஸ் விளையாட்டில் பயிற்சி அளித்து வருகிறார். இதனுடன் மாணவர்கள் மாவட்ட மற்றும் மாநில அளவில் போட்டிகளில் பங்கேற்கத் தேவையான உதவிகளும், வழிகாட்டுதல்களும் ஈஷா மூலமாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



■ மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கோணப்பட்டி கிராமத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2025 2026 திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வெங்காயம் விதை பண்ணை நிழல் வலைகுடிலில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.




4.12.2025 தேதிக்குப் பின்னர் பெறப்படும் கணக்கெடுப்புப் படிவங்கள் 9.12.2025 தேதியன்று வெளியிடப்படவுள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற வாய்ப்பில்லாத காரணத்தினால்

# கடைசி நேரம் வரை காத்திருக்காமல் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்களை உடனடியாக தங்களது BLOக்களிடம் வழங்கிட வேண்டும்

மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.27-
இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி சிவகங்கை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி நடைபெற்று வருகிறது. அந்தவகையில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் 4.11.2025 முதல் இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ள கணக்கெடுப்புப் படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வாக்குச் சாவடி நிலை அலுவலர்களிடம் (BLO) உடனடியாக திரும்ப வழங்கி வாக்காளர்கள் ஒப்புகை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், 4.12.2025 தேதிக்குப் பின்னர் பெறப்படும் இவ்வகையான கணக்கெடுப்புப் படிவங்கள் 9.12.2025 தேதியன்று வெளியிடப்படவுள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற வாய்ப்பில்லை. எனவே, கடைசி நேரம் வரை காத்திருக்காமல் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்களை உடனடியாக தங்களது ஙிலிளிக்களிடம் வழங்கிட வேண்டும்.

அதனைத்தொடர்ந்து, கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்தல், திரும்பப் பெறுதல் ஆகிய பணிகளுக்காக ஊராட்சி செயலர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் ஆகியோர்களது உதவிகளைப் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை BLOக்களிடம் அளிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இந்திய அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் இந்திய அரசியல் சாசன முகப்புரை உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்கள்.



# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு பேரணியை வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன், தொடங்கி வைத்தார்

தேனி, நவ.27-
தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் (Special Intensive Revision) பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு பேரணியை வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன் தொடங்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் நடைமுறைக்கு வரப்பெற்று, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் 04.11.2025 முதல் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (Booth Level Officer - BLO) இல்லம் தோறும் சென்று, கணக்கெடுப்புப் படிவம் விநியோகம் செய்யப்பட்டு, சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணியியை வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் தொடங்கி வைத்தார்.

இப்பேரணியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான பதாகைகளை பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஏந்திசென்று, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இப்பேரணி காமராஜர் பேருந்து முனையத்தில் தொடங்கி, மதுரை சாலை வழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை சென்று நிறைவு பெற்றது.

இப்பேரணியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி சந்திரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்திலிருந்து சிங்கம்புணரி வழித்தடத்திற்கான மகளிர் விடியல் பயண புதிய பேருந்தினை மகளிர்களின் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, முன்னாள் அமைச்சர் திரு.தென்னவன், திருப்பத்தூர் பேரூராட்சி துணை தலைவர் திரு.கான்முகமது, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக துணை மேலாளர்கள் திரு.நாகராஜன் (தொழில்நுட்பம்), திரு.பத்மகுமார் (வணிகம்) உட்பட பலர் உள்ளனர்.

# கோயம்புத்தூரில் முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் ரூ.208.50 கோடி செலவில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்கா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்






கோவை, நவ.27-
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த (25.11.2025) கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவிற்கு, முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் 208.50 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

செம்மொழிப் பூங்கா அமைத்திட அறிவிப்பு

கோயம்புத்தூரில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், செம்மொழி பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, 22.11.2021 அன்று கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், காந்திபுரத்தில் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நடைபாதை போன்ற அனைத்து வசதிகளும், கூட்ட அரங்கு, வெளி அரங்கு போன்ற கட்டமைப்புகளும் கொண்ட செம்மொழிப் பூங்கா இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார்.

உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்கா மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தல்

இவ்வறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 18.12.2023 அன்று செம்மொழி பூங்கா அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சி, காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகப் பகுதியில் 165 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கவும், தற்போது முதற்கட்டமாக 45 ஏக்கர் நிலப்பரப்பில், உலகத் தரத்திலான பூங்கா அமைப்பதற்கு 208.50 கோடி ரூபாய் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, செம்மொழிப் பூங்காவில் தாவரவியல் பூங்கா, சூரியதகடு, சிற்பங்கள், பேட்டரியில் இயங்கும் வாகனங்கள், உக்கடம் கழிவுநீர் சுத்திகரிப்பு மையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை குழாய் மூலம் செம்மொழி பூங்காவிற்கு எடுத்து வருதல், பூங்கா வளாகத்தில் தரை தள வாகன நிறுத்துமிடம், நிலத்தடி நீர்த்தொட்டி, மழைநீர் வடிகால், மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு குழாய்கள் மற்றும் கூடுதல் மேம்பாட்டு பணிகள், தரைத்தள வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மொத்தம் 208.50 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்.

பின்னர், பூங்காவில் உள்ள தமிழர் கொடை சிற்ப வனம், கடையேழு வள்ளல்கள் சிலைகள், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான விளையாட்டுப் பூங்கா, படிப்பகம், திறந்தவெளி அரங்கம் போன்றவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். மேலும், செம்மொழிப் பூங்காவில் மரக்கன்றினை நட்டார்.

அதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டம், செட்டிபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட ஓராட்டுக்குப்பை கிராமத்தில் அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டம் மற்றும் ஜி.டி. நாயுடு அறக்கட்டளையின் பங்களிப்புடன் 5 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றுத்திறனாளிகளுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ள 86 புதிய வீடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு வீடுகளுக்கான சாவிகளை வழங்கினார்.

பின்னர், முதலமைச்சர் கோயம்புத்தூரிலுள்ள முக்கிய பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடி, பூங்கா வளாகத்தில் நடைபெற்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

செம்மொழி பூங்காவின் சிறப்பம்சங்கள்

உலகத்தரம் வாய்ந்த இப்பூங்காவில், செம்மொழி வனம், மூலிகை தோட்டம், மகரந்த தோட்டம், நீர்த் தோட்டம், மணம்கமிழ் தோட்டம், பாலைவனத் தோட்டம், மலர்த் தோட்டம், மூங்கில் தோட்டம், நட்சத்திர தோட்டம், ரோஜா தோட்டம், பசுமை வனம் போன்ற 23 வகையான தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், செம்மொழி வனத்தில் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மரங்கள் மற்றும் செடிகள் நடப்பட்டு உள்ளதோடு, 2000க்கும் மேற்பட்ட ரோஜா வகைகள் ரோஜா தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பூங்கா வளாகத்தில் கடையேழு வள்ளல்களின் கற்சிலைகளும் நிறுவப்பட்டுள்ளது.

செம்மொழிப் பூங்கா வளாகத்தில், நுழைவுச்சீட்டு வழங்குமிடம் மற்றும் அனுபவ மையக் கட்டடம், 500 நபர்கள் அமரக்கூடிய வகையில் திறந்தவெளி அரங்கம், பூங்காவில் பணியாற்றும் தோட்ட தொழிலாளர்களுக்கு அறை, உணவகம், ஒப்பனை அறை, சில்லறை விற்பனை நிலையம், செயற்கை நீர்வீழ்ச்சியுடன் கூடிய நுழைவு வாயில் போன்ற பல்வேறு சிறப்பம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

செம்மொழிப் பூங்கா வளாகத்தில் தரை தள வாகன நிறுத்துமிடத்தில் மொத்தம் 453 கார்கள், 10 பேருந்துகள் மற்றும் 1000 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் அளவிற்கு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், செம்மொழிப் பூங்கா வளாகத்தினுள் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழைநீர் சேகரிப்பு வடிகால் அமைப்பு 2 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்கா வளாகத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கு நடைபாதை மற்றும் சாலை வசதி அமைக்கப்பட்டுள்ளதோடு, மகளிர் சுயஉதவி குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக "மதி அங்காடி"யும் நிறுவப்பட்டுள்ளது.

செம்மொழி பூங்கா வளாகத்தினுள், உலகத் தரத்தில் உயர்தர உடற்பயிற்சி கருவிகளுடன் கூடிய திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், 4,000 சதுர அடி பரப்பளவில் உள்வன மாதிரி காட்சியமைப்பு (ஜிமீக்ஷீகூஷீணீகூஷீவீஓஉனி), குழந்தைகள் விளையாடுவதற்கு 14,000 சதுர அடி பரப்பளவில் விளையாட்டுத்திடல், சிறுவர்களுக்கான உள்விளையாட்டு அறை, மாற்றுத்திறனாளிகள் விளையாடுவதற்கு ஏதுவாக பிரத்தியேக விளையாட்டுத்திடல் போன்ற பல்வேறு பொழுதுபோக்கு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வளாகத்தில் உள்ள நுழைவுச்சீட்டு மற்றும் அனுபவ மையக் கட்டடத்தில் பழங்கால தமிழர்கள் உபயோகப்படுத்திய பொருட்களுடன் கூடிய அருங்காட்சியகம் மற்றும் தாவரவியல் அருங்காட்சியகம், இளம்வயதினர் படிப்பதற்கு ஏதுவாக படிப்பகம், முதியோர்களும் மாற்றுத்திறனாளிகளும் பயணிக்கும் வகையில் சக்கர நாற்காலிகள், பேட்டரி வாகனங்கள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

செம்மொழி பூங்கா வளாகத்தில் உள்ள மரங்கள் மற்றும் தாவரங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய பெயர் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, அதில் னிஸி குறியீடுகள் மற்றும் ஙிணீகூஷீ நீஷீபீமீ போன்ற தொழில்நுட்ப வசதிகளும் நிறுவப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர். மு.பெ. சாமிநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், . ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் .பவன்குமார் க. கிரியப்பனவர், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் .கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையர் .மா. சிவகுரு பிராபாகரன், .துணை மேயர் .ரா.வெற்றிசெல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ தமிழக கடலோர பகுதிகளில் குறிப்பாக மன்னார்வளைகுடா மற்றும் கன்னியாகுமரி கடல் பகுதிகளில் நேற்று முதல் 29-ஆம் தேதி வரை மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசும் என வானிலை ஆய்வு மைய எச்சரிக்கை விடுத்ததை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் விசைப்படகு, நாட்டு படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை இதனால் கடற்கரை மற்றும் துறைமுகங்களில் மீனவர் விசைப்படகு, மற்றும் வள்ளங்களை பத்திரமாக நிறுத்தி வைத்தனர். சின்னமுட்டம் ன, குளச்சல், தேங்காய்பட்டணம் உள்ளிட்ட மீன்பிடி துறைமுகங்களில் இருந்து சுமார் 2200க்கும் மேற்பட்ட விசப்படகுகள் ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றன, இதில் புயல் எச்சரிக்கையை முன்னிட்டு சுமார் 700க்கு மேற்பட்ட விசைப்படகுகள் கரை திரும்பிவிட்டன,400க்கு மேற்பட்ட விசைப்படகுகள் தகவல் கொடுப்பட்டதாகவும் மீனவளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர், இதனால் திரும்பிய படகுகளை மீனவர்கள் பத்திரமாக தரையில் நங்கூரமிட்டு நிறுத்தி வைத்துள்ளனர்.





## "விவசாயிகளுக்கான மண் மாதிரி பரிசோதனை செயல் விளக்கக் கூட்டம்

காரைக்குடி, நவ.27-

காரைக்குடி, விசாலயன்கோட்டை, கலாம் கவி கிராமத்தில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பிலும், இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT) சென்னை இணைந்து, "விவசாயிகளுக்கான மண் மாதிரி பரிசோதனை செயல் விளக்கக் கூட்டம் - 2025" 25.11.2025 அன்று கல்லூரி அரங்கில் நடைபெற்றது. கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் அவர் களின் வழிகாட்டுதலின் படி இந்த நிகழ்வு சிறப்பாக அமைக்கப்பட்டது. சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மண்ணியல் துறை உதவி பேராசிரியர் கா.மகேஷ்வரன் வரவேற்புரையாற்றினார்.

பின்னர் சிறப்புரையாற்றிய முனைவர் சேது குமணன் அவர்கள், சமீபத்தில் வெளிநாடுகளுக்கு பயணித்தபோது அங்குள்ள வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து அந்த நாட்டின் வேளாண்மைத் துறை அமைச்சரை சந்தித்து விவாதித்த அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, IIT சென்னை வேதியியல் பிரிவு முனைவர் புஷ்பவனம் அவர்களின் ஆராய்ச்சி குழுவும் வேதிப் பொறியியல் துறையின் திட்ட இணை திரு. கே.சரன்ராஜ் மற்றும் திரு. நு கில்கமேஷ் ஆகியோர் சேது பாஸ்கரா மண்ணியல் துறையும் இணைந்து, சுமார் 50 விவசாயிகளிடமிருந்து நேரடியாக மண் மாதிரிகளைப் பெற்று, அவற்றின் சத்துத்தன்மை, அமிலத்தன்மை (pH), கரிமப் பொருள் அளவு உள்ளிட்ட அம்சங்களை அரங்கத் திலேயே பரி சோதனை செய்து விளக்கிக் காட்டினர்.

இந்த நிகழ்வில் சென்னை சோகா இகேதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி துணை முதல்வர் முனைவர் கண்மணி சுப்பிரமணியன், சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் சு. முரளி கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகள் வழங்கினர். நன்றியுரையை பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் மா. விஷ்ணுப்பிரியா அவர்கள் வழங்கினார். இந்த நிகழ்வினை மண்ணில் துறை உதவிப் பேராசிரியர்கள் முனைவர் இரா.தனசேகர பாண்டியன், திரு.கா.மகேஷ்வரன், நுண்ணுயிரியல் துறை உதவிப் பேராசிரியர் வே. கருப்புராஜ், சேபாஸ் நிறுவனத்தின் மேலாளர் திரு.க.விக்னேஷ் அவர்களும் மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்தனர். இந்த நிகழ்வில் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு இந்த நிகழ்வு சிறப்பாக அமைய உறுதுணையாக இருந்தனர்.

இந்த நிகழ்வு விவசாயிகளிடையே அறிவியல் வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மை இணைந்து முன்னேறும் பரிமாற்ற மேடையாக அமைந்தது.



## காட்பாடியில் இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர்ஸ் நில தரகர்கள் சங்கம் சார்பில் ஆலோசனை கூட்டம்

வேலூர், நவ.27-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, மதிநகர், ஜே,வி,ஆர், அலுவலகத்தில் இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர்ஸ் நில தரகர்கள் நல தேசியத் தலைவர் விருகை வி.என்.கண்ணன், ஆணைக்கிணங்க, மாவட்ட அளவிலான நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ரியல் எஸ்டேட் மற்றும் நிலதரகர்கள் சங்க மாவட்ட தலைவரும் திரைப்பட நடிகரும், தயாரிப்பாளமான ஜே.வி.ஆர் வெங்கட்ராமன் தலைமையிலும், வேலூர் ரியல் எஸ்டேட் அமைப்பின் ஒருங்கிணைந்த மாவட்டத் தலைவரும், சந்தன புரமோட்டர்ஸ், தேவா கிரானைட் அண்ட் மார்பிள்ஸ் மற்றும் தேவா கார்ஸ் நிறுவனருமான ஆர்.டி.என். பி.வாசுதேவன் முன்னிலையிலும் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில அமைப்பாளர் களபோராளி எஸ்.கே ராஜா, தேசிய துணைத் தலைவர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றி நிலதரகர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

இக்கூட்டத்தில் மாநில மாவட்ட அளவிலான நிர்வா கிகள் பிச்சாண்டி இளங்கோவன் கோவிந்தராஜ், சமூக ஆர்வலர் ரஞ்சித்குமார் (மாதனூர் காட்பாடி) உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவரையும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அடையாள அட்டை வழங்கப்பட்டது.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அங்குள்ள பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது இதில் 30ற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை பெற்றனர் மற்றும் இந்தியாவின் அரசியல் அமைப்பு தினத்தை முன்னிட்டு நம் நாட்டின் பிரயாம்பல் வாசிக்கப்பட்டு, நம் நாட்டின் இந்திய அரசியலமைப்பை பற்றிய சிறப்புக்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பள்ளி முதல்வர் சாநிஷா மற்றும் சிறப்பு விருந்தினர்கள் சி.எஸ்.ஐ.ஆர் மத்திய மின் வேதியல் ஆராய்ச்சி கூடத்தின் இன் தலைமை விஞ்ஞானி வி.சரஸ்வதி மற்றும் மூத்த வழக்கறிஞர் சி.விக்ரம் ஆகியோர் கலந்து கொண்டதோடு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் க.மனோஜ், செல்வி யுதிகா மற்றும் செல்வி கிருத்திகா ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 5க்குட்பட்ட மாடக்குளம் கண்மாய் மற்றும் அதன் கரைப்பகுதிகளில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன்,இ.ஆ.ப., அவர்கள், மாமன்ற உறுப்பினர் திரு.சுதன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடன் உள்ளனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகை தர உள்ளதால் மதுரை கிழக்கு வட்டம், உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன் உடன் உள்ளார்.

## இன்று (நவ27) மின்தடை அறிவிப்பு



சிவகங்கை, நவ.27-

சிவகங்கை மாவட்டம் இடயமேலூர் துணை மின் நிலையத்தில் இருந்து செல்லும் பகுதிகளில் இன்று 27.11.2025 காலை 09.00 மணி முதல் மாலை 5மணி வரைக்கும் மாதாந்திர பராமரிப்பு பணி நடைபெறுவதால் தமராக்கி, குமாரப்பட்டி, கண்டாங்கிப்பட்டி, மலம்பட்டி, சாலூர், பாப்பாகுடி, இடையமேலூர், கூட்டுறவு பட்டி, மேலாப்பூங்குடி, தேவன் கோட்டை, வில்லிப்பட்டி, ஒக்கப்பட்டி, புதுப்பட்டி, சக்கந்தி, சுற்றியுள்ள பகுதிகளில் மின்விநியோகம் இருக்காது ன மின் செயற்பொறியாளர் அறிவித்துள்ளார்.

## கொடைக்கானல் நட்சத்திர ஏரி நடைபயிற்சி மேடையில் ஒய்யாரமாக போஸ் கொடுத்த சாரைப்பாம்பு தட்டி தூக்கிய வனத்துறை



திண்டுக்கல், நவ.27-

திண்டுக்கல் மாவட்டம் மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானலில் அடர்ந்த வனப் பகுதிகள் அதிகமாக உள்ளது மேலும் சுற்றுலா தளத்தின் ஒன்றான நட்சத்திர வடிவிலான ஏரி உள்ளது இந்த ஏரி சுற்றி நடைமேடையில் கொடைக் கானல் உள்ளூர் வாசிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் தினந்தோறும் காலை மற்றும் மாலை வேளையில் அதிகமாக நடைபயிற்சி மேற்கொள் கின்றனர் மேலும் இப்பகுதியில் அதிக அளவில் பட்டா நிலங் களை வாங்கி வெறுமனே போட்டு உள்ளனர் மேலும் புதர்அடிக்காமலும் உள்ளனர் மேலும் இப்பகுதி அடர்ந்த வனப்பகுதி போல் காட்சி அளிக்கின்றது மேலும் இப்பகுதியில் காட்டு விலங்குக ளான காட்டு மாடு மற்றும் காட்டுப்பன்றிகள் குரங்குகள் பகல் நேரங்களில் உலா வருவது வாடிக்கையாகிவிட்டது. இதை பலமுறை வனத்துறை மற்றும் நகராட்சியிடம் சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் வாசிகள் குறிப்பாக நடைபயிற்சியாளர்கள் பலமுறை ஏரிச்சாலையை சுற்றி உள்ள குப்பைகளை சுத்தம் செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர் ஏரி சாலையில் பொதுவாக தூய்மை பணியாளர்கள் வெறுமனகுப்பையை பெயரளவில் சுத்தம் செய்கின்றனர் மேலும் நகராட்சி தூய்மை மேற்பார்வையாளர்களும் வருவது மற்றும் மேற்பார்வை பார்ப்பது கூட கிடையாது இதனால் நட்சத்திர ஏரியை சுற்றி பல இடங்களில் குப்பை கூழமாக காட்சியளிக்கிறது இதனால் சுற்றுலா பயணிகள் தினம் தினம் முகம் சுளிக்கும் அபாயமும் உள்ளது மேலும் கடந்த நான்கு நாட்களாக பெய்த மழையின் காரணமாக ஏரிச்சாலை கிரீன் ஏக்கர் அருகில் சுமார் 6 அடி நீளம் உள்ள மஞ்சள் சாரை பாம்பு ஒன்று இன்று மதியம் நடைபயிற்சி மேற்கொள்ளும் நடைமேடையில் ஒய்யாரமாக படுத்துக்கொண்டு வெயில் காய்ந்து கொண்டு நாக்கை வெளியே நீட்டி உருண்டு கொண்டு சுற்றுலா பயணிகள் மற்றும் நடைபயிற்சியாளர்களை அச்சுறுத்தி கொண்டு இருந்தது. உடனே அருகில் உள்ள பொதும க்கள் உடனடியாக வனத்துறைக்கு தகவல் கொடு த்தனர் உடனே விரைந்த வனத்துறை இந்த மஞ்சள் சாரை பாம்பை பிடித்து அடர்ந்த வனப்பகுதிக்குள் கொண்டு போய் விட்டனர். மேலும் ஏரியைச் சுற்றி காட்டு விலங்குகளான காட்டு எருமைகள் மற்றும் காட்டு பன்றிகள், குரங்குகள் அதிகளவில் பகல் நேரங் களில் வருவது சுற்றுலா பயணிகளை மூர்க்கத்தனமாக தாக்குவது வாடிக்கையாகிவிட்டது தற்போது பெரிய அளவில் ஆறடி நீளம் உள்ள பாம்பும் வந்ததால் இப்பகுதியில் சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் வாசிகள் இடையே பரபரப்பு ஏற்படுத்தியது.

## குடியாத்தத்தில் அரசு வேலை வாங்கி தருவதாக கிராம உதவியாளர் சுமதி என்பவர் 8 லட்சம் ரூபாய் பெற்று போலி நியமன ஆணை வழங்கி ஏமாற்றம்

### மோசடியில் ஈடுபட்ட சுமதி என்பவரை சிறப்புமிகு தமிழ்நாடு போலீசார் சுமதியை கைது செய்து சிறையில் அடைத்தனர்



வேலூர், நவ.27-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தத்தில் அரசு வேலை வாங்கி தருவதாக கிராம உதவியாளர் சுமதி என்பவர் 8 லட்சம் பெற்று போலி நியமன ஆணை வழங்கி ஏமாற்றம். மோசடி செய்த சுமதி என்பவரை சிறப்புமிகு தமிழ்நாடு போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். செங்கல்பட்டு முன்னாள் கிராம உதவியாளர் சுமதி என்ற பெண் கைது, செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழிக்குன்றம் பகுதியை சார்ந்த சேகர் மனைவி சுமதி (வயது 43) 2012 ஆம் ஆண்டு கருணை அடிப்படையில் வருவாய் துறையில் கிராம உதவியாளராக பணிக்கு சேர்ந்துள்ளார். இவர் கடந்த சில ஆண்டுகளாக அரசு வேலை வாங்கித் தருவதாக தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நபர்களிடம் பல லட்சம் ரூபாய் பெற்று மோசடியில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து மக்கள் கொடுத்த புகாரின் பேரில் இதனை உறுதி செய்யப்பட்டு சுமதியை வருவாய் துறை உயர் அதிகாரிகள் தற்காலிக பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி வேலூர் மாவட்டம் குடியாத்தம் அடுத்த கல்லூர் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேஷ், சந்தோஷ் ஆகிய இவர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு தனியார் செல்போன் நிறுவனத்தில் வேலை செய்து வந்தனர். அப்போது சுமதி என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு தான் அரசு வேலை வாங்கித் தருவதாக கூறியுள்ளார். அதன்படி 2 பேரும் தலா ரூபாய் 4 லட்சம் என மொத்தம் 8 லட்சம் ரூபாய் கொடுத்துள்ளனர். பணத்தைப் பெற்றுக் கொண்ட சுமதி இரண்டு பேருக்கும் வருவாய்த் துறையில் போலி பணி நியமன ஆணை மற்றும் அடையாள அட்டை ஆகியவை செல்போனில் அனுப்பி உள்ளனர். அப்பொழுது தான் கூறும் போது செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டும் என தெரிவித்துள்ளனர். இதில் சந்தேகம் அடைந்த குடியாத்தம் பகுதியை சேர்ந்த வெங்கடேஷ், சந்தோஷ் ஆகியோர் இது குறித்து உள்ளூரில் உள்ள அரசு அதிகாரிகளிடம் விசாரணை செய்த போது இவை போலியான ஆவண ஆணை என தெரியவந்துள்ளது. இதுகுறித்து குடியாத்தம் டவுன் போலீசில் பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து குடியாத்தம் நகர காவல் ஆய்வாளர் ருக்மாங்கதன், உதவி ஆய்வாளர் ஜெயந்தி மற்றும் செங்கல்பட்டு போலீசார் தீவிர விசாரணைகள் மேற்கொண்டு, சுமதியை கைது செயது குடியாததம் அழைத்து வந்தனர். போலீசார் சுமதி மீது வழக்குப்பதிந்து 25.11.2025 அன்று இரவு கைது செய்து வேலூர் மத்திய பெண்கள் சிறையில் அடைத்தனர். இது குறித்து இது போன்ற அவல நிலைகள் தொடர்கதையாகவே உள்ளது என ஏமாறுபவர் உறுதியானால் ஏமாற்றுபவர்கள் அதிகரித்து வருகின்றனர் என குடியாத்தத்தில் பரபரப்பாக பேசி வருகின்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161